# KUPASAN MUTU JAWAPAN

## BAHASA TAMIL 2

6354/2

# SPM

## TAHUN 2012

KEMENTERIAN PENDIDIKAN MALAYSIA

## INSTRUMEN PENTAKSIRAN

| | | |
|---|---|---|
| **Kod** | **:** | **6354/2** |
| **Markah** | **:** | **100** |
| **Masa** | **:** | **2 jam 15 minit** |

## REKA BENTUK INSTRUMEN PENTAKSIRAN

Kertas 2 mengandungi empat bahagian. Calon perlu menjawab kesemua soalan.

| | | |
|---|---|---|
| Bahagian 1 | : | Pemahaman Petikan Kecil dan Prosa Moden |
| Bahagian 2 | : | Pemahaman Petikan Cerpen dan Puisi Klasik |
| Bahagian 3 | : | Peribahasa dan *Ceyyul* |
| Bahagian 4 | : | Pengetahuan dan Kemahiran Bahasa (Fonologi, Morfologi, Sintaksis dan Tatabahasa). |

## PRESTASI KESELURUHAN

Calon mempamerkan prestasi yang memuaskan. Namun, sebilangan besar calon tidak mempunyai kemahiran yang mencukupi untuk menjawab soalan memprosakan puisi dan mozhianigal. Tambahan pula, pemahaman calon terhadap petikan tertentu juga kurang memuaskan. Masih terdapat segelintir calon gagal mengaplikasikan teknik menjawab yang tepat.

## PRESTASI MENGIKUT KUMPULAN CALON

### Kumpulan Tinggi

Calon dalam kumpulan ini berjaya memahami keperluan soalan dan menjawab secara tepat. Mereka juga dapat mengaplikasikan teknik menjawab dengan tepat. Jawapan calon menunjukkan calon mempunyai pengetahuan am dan dapat menerangkan idea dengan jelas dan mudah difahami.

### Kumpulan Sederhana

Calon kumpulan ini berjaya menguasai kemahiran asas bahasa tetapi kurang memahami teknik menjawab yang tepat. Kematangan idea calon kurang bernas dan relevan. Ini menunjukkan tahap pembacaan calon masih di tahap yang rendah.


### Kumpulan Rendah

Calon kumpulan ini menunjukkan mutu jawapan yang amat rendah. Kumpulan ini tidak memahami kehendak soalan disebabkan penguasaan kemahiran bahasa yang amat rendah. Jawapan calon tidak menepati kehendak soalan. Penguasaan teknik menjawab oleh kumpulan calon ini amat lemah.


**Prestasi Terperinci:**

Soalan 1


1 கீழ்க்காணும் இச்சுவரொட்டி உணர்த்தும் இரண்டு கருத்துகளை எழுதுக.




Soalan ini merupakan soalan bergambar-frasa mengenai isu semasa. Calon perlu peka dengan isu-isu semasa sebagai persediaan menjawab soalan ini.


1) - இன்று நம் இந்திய சமுதாயம் தன் பண்பாடு, மரபுகளை
அனைத்தையும் மறந்து சினிமாவின் மோகத்தில்
வாழ்ந்து கொண்டிருக்கிறது.
- உலகில் செம்மொழி என்ற அங்கீகாரத்தைப் பெற்ற
நம் தமிழ்மொழி இன்று பயனளிக்காத திரைப்படம்,
நாடகங்களின் தாக்கத்தினால் அழிந்து வருகிறது.

Sebahagian besar calon gagal mengenalpasti mesej yang disampaikan oleh gambar. Majoriti calon tidak berupaya mengenalpasti mesej dan gagal mengaitkan dengan isu semasa. Calon dikehendaki memberi dua pendapat yang berbeza. Tetapi, majoriti calon memberi dua pendapat yang sama. Jawapan di atas merupakan contoh jawapan calon yang baik.


1) - நம் கலாச்சாரத்தை நாம் பின்பற்ற மறந்து விட்டோம்.
- பிற இனத்தவரின் மொழியை அவர்களின் கலாச்சாரத்தை [illegible]

Jawapan di atas merupakan contoh jawapan calon yang kurang memuaskan kerana memberikan dua pendapat yang sama.

Soalan 2

**2** கீழ்க்காணும் நாளிதழ்த் தலைப்புகளின்வழி உணர்த்தவரும் செய்தி யாது?

**ஒரே மலேசியா கொள்கையின்கீழ் தமிழ்மொழி மலேசிய ரிங்கிட்டில் இடம்பெறச் செய்ய வேண்டும்.**

— மலேசிய நண்பன்

**வங்கிகளில் தமிழை இடம்பெறச் செய்யுங்கள்!**
**நிதி அமைச்சரிடம் நேரடி வேண்டுகோள்.**

— மக்கள் ஓசை

Soalan ini berdasarkan keratan akhbar yang memerlukan pemahaman terperinci. Calon perlu mempunyai amalan membaca suratkhabar untuk menjawab soalan ini.

2. • ஒரே மலேசியா கொள்கையின் படி மலேசிய ரிங்கிட்டிலும் வங்கிகளிலும் தமிழை
இடம்பெறச் செய்ய வேண்டும். ஏனெனில், ஒரே மலேசியா என்று எடுத்துக்கொண்டால் அனைத்து
மதங்களும் அடங்கியுள்ளன. மலேசியா என்பதால் மலாய் மொழியில் மட்டும் இந்த
நாடு ஆட்சி அதை ஆள இயலாது. தமிழர்களாகிய நமது உரிமைகளைப் பொது
இடங்களில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

Calon gagal memahami maksud tersirat dalam soalan ini. Kebanyakan calon hanya menjawab maksud tersurat. Hanya calon yang banyak membaca sahaja dapat memahami dan menjawab soalan dengan tepat. Jawapan di atas merupakan contoh jawapan calon yang baik.

2) - நாம தமிழ் மொழி மலேசியாவில் இடம்பெறச் செய்ய வேண்டும்

- வங்கியில் நாம் தமிழ்மொழியை இடம்பெறச் செய்ய வேண்டும்.

Jawapan di atas merupakan contoh jawapan calon yang kurang memuaskan kerana calon hanya menyalin sebahagian daripada pernyataan soalan.

Soalan 3

**3** கீழ்க்காணும் பகுதியை வாசித்து, ராதிகா சிற்சபை ஈசன் பற்றிய **இரண்டு** சிறப்புகளை எழுதுக.

## கனடிய நாடாளுமன்றத்தில் தமிழ் முழக்கம்

### திருக்குறள் மீது பதவி உறுதிமொழி



கனடா, ஜூன் 12-

கனடிய நாடாளுமன்றத்திற்குத் தேர்வு பெற்ற இலங்கைத் தமிழ்ப்பெண் ராதிகா சிற்சபை ஈசன், அந்நாட்டு நாடாளுமன்றத்தில் தமது கன்னிப் பேச்சினைத் தமிழில் நிகழ்த்தியதோடு திருக்குறள் மீது பதவி உறுதிமொழியும் எடுத்துக்கொண்டு மாபெரும் சாதனை படைத்துள்ளார்.

"கனடிய நாடாளுமன்றத்தின் முதல் தமிழ் உறுப்பினர் என்ற வகையிலே இந்த மதிப்பிற்குரிய அவையில் என் தாய் மொழியான தமிழில் பேச முடிவதை எண்ணி ஒருங்கே பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேன். புலம்பெயர்ந்த தமிழர்களான எங்களையும் இந்த நாடு இருகரம் நீட்டி அரவணைத்துள்ளதோடு இந்த அவையில் திருக்குறள் மீது உறுதிமொழி எடுக்க அனுமதித்ததைத் தமிழுக்குக் கிடைத்த பெருமை மட்டுமல்ல; உலகெங்கிலும் வாழும் தமிழருக்குக் கிடைத்த அங்கீகாரமாகவே கருதுகிறேன். கனடா வாழ் தமிழரின் அடுத்தக்கட்ட முன்னெடுப்புக்கு இஃதுதொரு மைல்கல்லாகவே அமையும் எனக் கருதுகிறேன்." என்று அவர் தமதுரையில் கூறினார்.

*நன்றி, மக்கள் ஓசை*

Calon perlu membiasakan diri dengan laras bahasa media untuk menghadapi soalan berbentuk ini.

3) கனடிய நாடாளுமன்றத்தின் முதன் தமிழ் உறுப்பினர் என்ற சிறப்பு ராதிகா சிற்சபை ஈசனைச் சேரும். கனடிய நாடாளுமன்றத்தில் அவர் தமிழில் பேச்சு நடத்தியதோடு திருக்குறள் மீது பதவி உறுதிமொழி எடுத்து சாதனை படைத்தார்.

Jawapan di atas mempamerkan mutu jawapan yang cemerlang. Kebanyakan calon memahami kehendak soalan dan berjaya menjawab dengan tepat. Jawapan di atas merupakan contoh jawapan calon yang baik.

Soalan 4


**4** கீழ்க்காணும் உரைவீச்சு உணர்த்தவரும் கருத்து யாது?

**காலம்!**

அம்மா!
அன்று
எனக்காக உழைத்தாய்
இன்றும்
எனக்காக உழைக்கிறாய் ...!


ரப்பர் மரக்காடுகளில்
ரப்பர் வழிகிறதோ இல்லையோ
இன்னமும் கசிகிறது
உன் வியர்வை மட்டும்!

அம்மா...!
நீ அழுததைப் பார்த்திருக்கிறேன்
எப்போதாவது
சிரித்திருக்கிறாயா!!!




ப.ராமு
— இப்போது நீ இருந்தால் ...
(எடுத்தாளப்பட்டது)

Calon perlu banyak membaca dan menghayati puisi sebagai persediaan mendekati soalan sebegini.




Calon gagal memahami maksud tersirat puisi ini. Akibatnya, calon hanya memberikan maksud tersurat sahaja. Jawapan di atas merupakan contoh jawapan calon yang baik.



Jawapan di atas merupakan contoh jawapan calon yang kurang memuaskan.

Soalan 5

**5** கீழ்க்காணும் துணுக்கில் மாணவரின் கூற்றைப் பற்றி நீ அறிந்துகொண்டது என்ன?





Calon harus memikili kemahiran mentafsir mesej yang dibawa oleh komik untuk menjawab soalan seperti ini dengan baik.

(5) ஆசிரியர் கற்றுக் கொடுத்தது மாணவனின் மூளையில் பதியவில்லை என்ற கூற்றை மாணவன் தலையில் எறும்பு ஏறுகிறது என்று தவறாகப் புரிந்து கொண்டான்.

Kebanyakan calon gagal mentafsir unsur kelucuan yang terkandung dalam soalan ini. Segelintir calon menyalin ayat yang terkandung dalam soalan. Jawapan yang tepat adalah seperti dipamerkan di atas.

Soalan 6

**6** கீழ்க்காணும் பகுதியை வாசித்து, எம்.ஜி.இராமச்சந்திரன் பற்றிய **இரண்டு** சிறப்புகளை எழுதுக.



பொன்மனச் செம்மல் எனப் போற்றப்படுபவர் எம்.ஜி.ஆர். என்னும் எம்.ஜி.இராமச்சந்திரன். இவர், புரட்சிமிக்க பாத்திரங்களின்வழி நடித்துத் தமிழக மக்களின் மனங்கவர்ந்தவர். ‘அச்சம் என்பது மடமையடா! அஞ்சாமை திராவிடர் உடமையடா!’, ‘நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி இந்த நாடே இருக்குது தம்பி’ போன்ற பாடல்கள்வழி இளைஞர்களுக்கு எழுச்சியூட்டியவர்; தாயைத் தெய்வமாகப் போற்றிய பண்பினர். அரசியலில் ஈடுபட்டுத் தமிழகத்தின் முதலமைச்சரான இவர், தம் ஆட்சி காலத்தில் தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் செயற்கரிய செயல்கள் செய்த செம்மல்; வாரிக் கொடுத்த வள்ளல். தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக்கழகம் நிறுவ 100 ஏக்கர் நிலம் கேட்டுச் சென்ற தமிழகப் புலவர் குழுவுக்கு 1000 ஏக்கர் நிலைத்தை ஒதுக்கிய அருட்கொடையாளர். தந்தை பெரியாரால் பரிந்துரைக்கப்பட்ட தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தைச் சில மாற்றங்களுடன் அமலுக்குக் கொண்டுவந்தவர். ஈழத்தில் தமிழர்களின் இன்னலைத் துடைக்க உதவியவர். கருமவீரர் காமராஜர் சிந்தனையில் உருவான சத்துணவுத் திட்டத்தை அமுல்படுத்திப் பள்ளிச் சிறுவர்களின் பசியைத் தீர்த்தவர். எம்.ஜி.ஆரைத் தம் இதயதெய்வமாக ஏற்றுக்கொண்ட இரசிகர்கள் அவரைப் போலவே புகைபிடிக்காமலும் மது அருந்தாமலும் பெற்ற தாயைத் தெய்வமாகப் போற்றியும் வரும் அன்பர்கள் அநேகம். ‘மூன்றெழுத்தில் என் மூச்சிருக்கும், அது முடிந்த பின்னாலும் பேச்சிருக்கும்’ என்று பாடியது போலவே காலமாகி கால் நூற்றாண்டு கடந்தும் தமிழர் இதயங்களில் நாடோடி மன்னனாக, எங்கள் வீட்டுப் பிள்ளையாக, அறிஞர் அண்ணாவின் இதயக்கனியாக இன்றும் வாழ்கிறார்.

– **உங்கள் குரல்**
[சில மாற்றங்களுடன்]

Calon perlu melengkapkan diri dengan teks-teks yang mempunyai nilai-nilai berunsur positif yang mempunyai laras bahasa media untuk menghadapi soalan berbentuk sebegini.

6) i) இவர் தாயைத் தெய்வமாகப் போற்றிய பண்பினர்.
ii) இவர் அரசியலில் ஈடுபட்ட காலத்தில் தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் செயற்கரிய செயல்கள் செய்து வாரிக் கொடுத்த வள்ளல் என்ற பெயரைப் பெற்றவர்.

Jawapan calon perlu berdasarkan teks yang diberikan sahaja. Jawapan di bawah mempamerkan mutu jawapan yang cemerlang. Kebanyakan calon memahami kehendak soalan dan berjaya memberi dua isi yang tepat. Jawapan di atas merupakan contoh jawapan calon yang baik.

Soalan 7

## கேள்விகள் 7–10

*கொடுக்கப்பட்டுள்ள பகுதியை வாசித்து, தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை காண்க.*

1 மனித இனத்தின் தொடர்புக் கருவியாக மொழி மட்டுமே இருந்த காலம் கடந்துவிட்டது. இன்றைய நாளில் மொழியைக் கடந்து பல்வகைத் தொடர்புக் கருவிகள் உருவாகிவிட்டன. மொழியை அடிப்படையாகக் கொண்ட பல்வகைத் தொடர்பு ஊடகங்களும் உருவாகியுள்ளன. அவற்றுள் குறுந்தகவல் குறிப்பிடத்தக்கதாகும். இது மக்களிடையே மிகப் பரவலாகப் பெருகியுள்ள ஊடகமாகும். ஆங்கிலத்தில் *எஸ்.எம்.எஸ்* எனச் சொல்லப்படுவதையே மொழியாக்கம் செய்து குறுந்தகவல், குறுஞ்செய்தி, துளிச்செய்தி என்றெல்லாம் சொல்கின்றோம்.

2 இன்று இளையோரிடையே மிகப் பரவலான செல்வாக்கினைப் பெற்ற தொடர்பு ஊடகமாகக் குறுந்தகவல் அமைந்துள்ளது. கடிதம், தொலைபேசி போன்ற தொடர்புக் கருவிகளை முறியடித்துவிட்டது குறுந்தகவல். சமுதாயத்தில் எல்லா நிலைகளிலுள்ளவர்களும் பயன்படுத்தக்கூடிய ஊடகமாக இஃது அமைந்துள்ளது. உலக மக்களில் அதிகமானோர் இத்தொடர்பு ஊடகத்தைப் பயன்படுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது.

3 இன்றைய நாளில் 2.4 பில்லியன் மக்கள் இச்சேவையினைப் பயன்படுத்துகின்றனர். கைப்பேசியைப் பயன்படுத்தும் 74 விழுக்காட்டினர் இச்சேவையைப் பயன்படுத்துவதாகக் கூறப்படுகின்றது. கடந்தாண்டின் முதல் மூன்று மாதங்களில் மட்டும் மலேசிய மக்களால் அனுப்பப்பட்ட குறுந்தகவலின் எண்ணிக்கை 11.7 மில்லியனாகும். இத்தகவலைப் பல்முனைத் தொடர்புத்துறை வாரியம் அறிவித்துள்ளது.

4 உலக மக்களிடையே மிகப்பெரிய செல்வாக்கினைப் பெற்றுள்ள குறுந்தகவல் சில நன்மைகளுக்கிடையே பல்வகைத் தீமைகளையும் விளைவிக்கின்றது. பணச்சிக்கனம், காலச்சிக்கனம், விரைவான தொடர்பு முதலிய நன்மைகளைக் குறுந்தகவல் வழியாகப் பெறுகின்றோம் என்பதில் ஐயமில்லை. இருப்பினும், இவற்றை அடுத்துப் பல்வேறு தீமைகளையும் இஃது உருவாக்குகின்றது என்றால் மறுப்பதற்கில்லை.

5 குறுந்தகவலின் இன்றைய நிலை மாறிவிட்டது. தொடர்புநிலை யாவும் குறுந்தகவல் வழியாகவே நிகழ்கின்றது. கடிதம் எழுதுதல், வாழ்த்து அட்டை அனுப்புதல் என்னும் சூழல் **அற்றுவிட்டது**. இன்றைய தலைமுறையினருக்குக் கடிதம் எழுதுவதற்கான சூழல் அருகிவிட்டது. நலம் விழைதல், பாராட்டுத் தெரிவித்தல், வாழ்த்துக் கூறுதல் என்பன மிக மிகச் செயற்கையாகவும் சுருக்கமாகவும் நிகழ்கின்றன. மனித உணர்வினைக் கடந்து, சடங்கு என்னும் நிலையே எஞ்சியுள்ளது.

6 இஃதொருபுறமிருக்க குறுந்தகவல், மனித இனத்திற்கு மற்றுமொரு இழப்பினை ஏற்படுத்துகின்றது. இது மனிதச் சிந்தனைக்கு அடிப்படையாக உள்ள மொழிக்குக் குந்தகம் விளைவிக்கின்றது; மொழிச்சிதைவைப் பரவலாக ஏற்படுத்துகின்றது. பலர் எழுத்துகளையும் சொற்களையும் சுருக்கிச் செய்திகளைத் தெரிவிக்க முனைகின்றனர். ஆங்கிலத்திற்கு மட்டுமே இந்நிலை ஏற்பட்டுள்ளது என்று எண்ணிவிட வேண்டாம். பெருவாரியான மொழிகளுக்கும் இதே நிலைதான் என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது.

– ***செம்பருத்தி***

(எடுத்தாளப்பட்டது)

**7** இளையோரிடையே மிகப் பரவலான செல்வாக்கினைப் பெற்ற தொடர்பு ஊடகமாகக் குறுந்தகவல் அமைந்துள்ளது. ஏன்?

Calon perlu meluaskan pengetahuan diri mereka melalui pengamalan tabiat membaca untuk menjawab soalan sebegini.

(7) இளையோரிடையே மிகப் பரவலான செல்வாக்கினைப் பெற்ற தொடர்பு ஊடகமாகக் குறுந்தகவல் அமைகின்றது. இது மற்றவர்களோடு சுலபமாகவும் மிகச் சுருக்கமாகவும் தொடர்பினை வைத்துக் கொள்ள உதவுகின்றது. மேலும், கடிதம் எழுதுதல், வாழ்த்து அட்டையை அனுப்புதல் என்னும் சூழல் முறியடிக்கப்பட்டுப் பணத்தையும் காலத்தையும் சிக்கனம் பெற இந்தக் குறுந்தகவலானது இளையோரிடையே மிகப் பரவலாகக் காணப்படுகின்றது.

Mutu jawapan calon bagi soalan ini adalah baik. Calon dapat membaca dan memahami teks pemahaman dengan jelas. Jawapan di atas merupakan contoh jawapan calon yang baik.


- காரணம் பணச்சிக்கனம், காலச்சிக்கனம், விரைவான தொடர்பு முதலிய நன்மைகளைக் கொடுக்கின்றது.
- நலம் விழைதல், பாராட்டுத் தெரிவித்தல், வாழ்த்துக் கூறுதல் என்பவை மிக மிகச் செயற்கையாகவும் சுருக்கமாகவும் இருக்கின்றது; நிகழ்கின்றது.
- தொடர்பு நிலை யாவும் குறுந்தகவல் வழியாகவே நிகழ்கின்றது.

Segelintir calon menjawab dalam bentuk ayat yang tidak lengkap seperti yang dipamerkan di atas.

Soalan 8

**8** குறுந்தகவலின் வழியாகத் தொடர்புநிலையில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் யாவை?

Calon perlu mengamalkan tabiat membaca untuk menjawab soalan sebegini.


8) குறுந்தகவலின் வழியாகத் தொடர்புநிலையில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள்
கடிதம் எழுதுதல், வாழ்த்து அட்டை அனுப்புதல் போன்றவை
முறியடிக்கப்பட்டுள்ளன. அதுமட்டுமன்றி, பாராட்டு தெரிவித்தல், நலம்
விசாரித்தல், வாழ்த்துக் கூறுதல் போன்றவை சுருக்கமாகவும்
செயற்கையாகவும் இருக்கின்றன. மேலும், மனித உணர்வுகளைக்
கடந்து, சடங்கு என்னும் நிலை மிகுந்துள்ளது.


Majoriti calon berjaya memahami teks yang diberikan dengan baik. Calon berjaya memberikan jawapan bermutu tinggi. Calon juga dapat menyenaraikan kesan buruk penggunaan SMS (Sistem Pesanan Ringkas). Jawapan di atas merupakan contoh jawapan calon yang baik.

Soalan 09

**9** கருமையாக்கப்பட்டுள்ள சொல்லுக்கு ஏற்ற பொருள் எழுதுக.

கடிதம் எழுதுதல், வாழ்த்து அட்டை அனுப்புதல் என்னும் சூழல் **அற்றுவிட்டது.**

Calon harus menguasai perbendaharaan kata yang luas untuk menjawab soalan seperti ini.


அற்றுவிட்டது – மறைந்துவிட்டது

Kebanyakan calon berjaya memberikan sinonim yang tepat. Jawapan di atas merupakan contoh jawapan calon yang cemerlang.

Soalan 10

**10** மனித வாழ்வில், குறுந்தகவலால் ஏற்படுவரும் மாற்றங்களைக் களைவதற்கு மேற்கொள்ளவேண்டிய **வழிமுறைகளை** 50 சொற்களுக்குள் எழுதுக.

Calon harus mempunyai pengetahuan yang luas melalui amalan membaca untuk menghadapi soalan sedemikian. Calon dikehendaki menulis isi-isi dalam 50 patah perkataan.

10) கீழ்காணும் பத்தி மனித வாழ்வில், குறுந்தகவலால்
ஏற்படுவரும் மாற்றங்களைக் களைவதற்கு மேற்கொள்ளவேண்டிய
வழிமுறைகளை விளக்குகின்றது. குறுந்தகவல் அனுப்புவதின்
கட்டணத்தை அதிகப்படுத்தலாம். ஒருவர் ஒரு நாளைக்கு
இவ்வளவு குறுந்தகவல்தான் அனுப்ப முடியும் என்று சட்டம்
அமல்படுத்தப்பட வேண்டும். மேலும், குறுந்தகவல் ~~அனுப்~~ அனுப்பும்
போது, வார்த்தைகளைச் சுருக்குவதைத் தவிர்க்க வேண்டும்.
நலம் விசாரித்தல், பாராட்டு உறுதல் போன்றவை நேரடியாக
தெரிவிக்கப்பட வேண்டும். ~~த~~ அதுமட்டுமின்றி ஒரு நாளைக்கு
அதிகமான குறுந்தகவல் அனுப்புவருக்கு அதிகமான கட்டணம்
செலுத்தும்படி சட்டமிட வேண்டும்.

Majoriti calon menjawab soalan ini dengan cemerlang. Calon berjaya mengemukakan pendapat yang bernas dan tepat.  Namun kesalahan ejaan sangat ketara dalam ayat.  Jawapan di atas merupakan contoh jawapan calon yang baik.

Soalan 11

**கேள்விகள் 11 – 14**

*கொடுக்கப்பட்டுள்ள சிறுகதைப் பகுதியை வாசித்து, தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை எழுதுக.*

மாதவன் *கிராணி* தொண்டையைச் செருமி உயர்த்தி நீதிமன்றச் சேவகன் கூப்பிடுவதுபோல் கூப்பிட்டார். “முத்துசாமி ...! முத்துசாமி ...!”

*ஆஜர்* சொல்வதற்குக் கூட நா எழவில்லை முத்துசாமிக்கு. வறண்ட நாக்கை எச்சிலால் ஈரப்படுத்திக்கொண்டே முன்வந்து நின்றான். இதயம் என்றுமில்லா வேகத்தில் தடதடவென்று அடித்துக்கொண்டது. மாதவன் *கிராணி* உட்கார்ந்திருந்த மேசையோரம் போய்ப் பௌவியமாக நின்றான் முத்துசாமி.

“இந்தா, இதிலே கைநாட்டுப் போடு. உனக்கு மூனு மாசந்தான் *பர்மிட்*, அதுக்குள்ளே வேற எங்காச்சம் வேலை தேடிக்க. இதோட மூனு மாசம் *நோட்டிசும்* இருக்கு. *பர்மிட்* முடியும்போது *நோட்டிசும்* முடிஞ்சிடும். புரிஞ்சுதா? ஆறுமுகம் ...” *கிராணி* அடுத்த நபரைக் கூப்பிட்டார்.

*நோட்டீசையும் பர்மிட்டையும்* கையில் பிடித்துக்கொண்டே வெளியில் வந்தான் முத்துசாமி. கைநாட்டுப் போடும்போது மை பதிந்த கைவிரலைக் காற்சட்டையில் துடைத்துக் கொண்டே தன் வீட்டை நோக்கி நடந்தான். அவனைப்போல் *பர்மிட்* வாங்க *ஆபீசின்* முன் பலரும் கூடியிருந்தனர். முத்துசாமி அவர்களை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. அவர்களில் சிலர் மாதவன் *கிராணிக்கு* வேண்டியவர்கள், சிலர் துரைக்குப் பிடித்தவர்கள், வேறு சிலர் **கையில் பசையுள்ளவர்கள்**. எப்படியும் சமாளித்துக் கொள்வார்கள் என்ற எண்ணத்தில்தான் முத்துசாமி அவர்களைப் பார்த்தும் பார்க்காமலும் நடந்து கொண்டிருந்தான்.

“வேலை *பெர்மிட்* கிடைச்சவங்க சில பேருக்குத் திரும்பவும் வேலை கிடைக்குமாமே” என்று முன்னால் யாரோ சொல்லிக் கொண்டு போனது முத்துசாமியின் காதில் வந்து விழுந்தது. கொஞ்சம் ஆறுதலான வார்த்தைகள்தாம். ஆனால் அந்தச் சில பேரில் தானும் ஒருவனாக இருக்க வேண்டுமே?! முத்துசாமியின் மனம் பேயாய் அலைந்து கொண்டிருந்தது.

எங்கெல்லாமோ ஓடிப் பறந்து உருண்டு புரண்டு கிடந்த முத்துசாமியின் மனம் ‘டங்கென்று’ அவன் முன்னால் வந்து விழுந்தது. “ம்! .... சிவப்புப் *பாஸ்போட்டுக்காரனுக்கு* எங்க போனாத்தான் வேலை கொடுக்கப் போறாங்க? நஞ்சானும் குஞ்சானுமா ஏழெட்டு ஆயிடுச்சு. இதுங்கள எங்க இழுத்துக்கிட்டுப் போய் எப்படிக் கஞ்சி ஊத்துவேன்?” புலம்பிக் கொண்டே வீடு வந்து சேர்ந்தான் முத்துசாமி.

“**அட இதுக்காக ஏன்யா வருத்தப்படுற! மரம் வச்சவன் தண்ணி ஊத்தாமலா போவான்**? எல்லாம் அந்த மகமாயி பார்த்துக்குவா!” அழுத்திக்கொண்டிருக்கும் தங்கள் வாழ்க்கையின் துயரத்தைத் தெய்வத்திடம் இறக்கிவைத்தபடியே கடைசிக் குழந்தையை இடுப்பில் இடுக்கிக் கொண்டு சமையல் கட்டுக்குள் நுழைந்தாள் மங்கம்மா.

“மாதவன் *கிராணி* மனசு வைக்காட்டி மூட்டை கட்டறதத் தவிர வேறு வழியில்லை. எப்படியாச்சும் அவர் கால்ல, கையில விழுந்தாவது இன்னும் ஒரு ரெண்டு வருசத்துக்கு வேலை கெடைக்கும்படியா செஞ்சிடணும். அதுக்குள்ள *பிரஜா* உரிமை வந்திடும்.

இல்லாட்டி வயத்தக்கட்டி வாயக்கட்டி கப்ப காசு கெடச்சா போதுமுன்னு ஊரு பக்கம் ஓடிட வேண்டியதுதான்'' முணு முணுத்துக் கொண்டிருந்தான் முத்துசாமி.

முத்துசாமியைப் போன்ற பலரைப் பயமுறுத்தியபடியே இரண்டரை மாதங்கள் ஓடி முடிந்தன. *பிரஜா* உரிமையும் வந்தபாடில்லை. மாதவன் கிராணியை விட்டால் வேறு வழியில்லை என்ற முடிவுக்கு வந்தான் முத்துசாமி. மாதவன் கிராணியால் தன் மகளும் மனைவியும் பட்ட அவமானங்கள் அவன் மனத்தை அறுத்து ரணமாக்கிக் கொண்டிருந்தாலும் அவரைப் பார்த்து விடவேண்டும் என்ற முடிவுக்கு வந்தான். இப்போது போனால் என்ன பண்ணுவானோ? என்ற தயக்கம் வேறு அவனது நடையைத் தளர்த்தின. சிரம்பானிலிருக்கும் அண்ணாசாமியைப் பார்த்தாலாவது ஆறுதலாக இருக்குமென்று *டவுனுக்குப் பஸ்* ஏறினான்.

''என்னப்பா முத்துசாமி, கப்பலே கவுந்த மாதிரி முகத்தைக் கவுத்துக்கிட்டே வர?'' ஓமப்பொடி, பக்கோடா இன்ன பிற இந்தியர் பலகாரங்களை விற்கும் அண்ணாசாமியின் குரலைக் கேட்டு நிமிர்ந்து பார்த்தான் முத்துசாமி. ஏற்கனவே அந்தத் தோட்டத்தில் வேலை செய்தவன்தான் அண்ணாசாமி. மாதவன் கிராணியோடு ஏற்பட்ட வாய் தகராறு முற்றி அவசரத்தில் **கையை ஓங்கி விட்டான்**. அப்புறமென்ன? இருபத்து நான்கு மணி நேர *நோட்டிசு*. *நோட்டிசு* கொடுத்த அந்தக் கணத்தில் செய்வதறியாது விழித்து நின்றான். மாதவன் கிராணியிடம் மன்னிப்புக் கேட்க அழைத்தும் போக மறுத்து விட்டான். பிஞ்சும் பூவுமாகத் தனது நான்கு பிள்ளைகளையும் மனைவியையும் அழைத்துக் கொண்டு சிரம்பானுக்கு வந்தவன்தான் இந்த அண்ணாசாமி.

''முத்துசாமி ...! என்னப்பா இது? கேட்டுக்கிட்டே இருக்கேன். ஒரு பதிலும் சொல்ல மாட்டேங்கிற?''

''ஒன்னுமில்ல அண்ணாசாமி, அடுத்த மூனு மாசத்திலே வேற எடம் பார்க்கணுமாம். *நோட்டிசு* கொடுத்துட்டானுங்க. அந்த *நோட்டிசும்* முடிய இன்னும் பத்துப் பதினஞ்சி நாளுதான் இருக்கு. அதான் என்ன செய்யலாம்னு யோசிச்சிக்கிட்டே வர்றேன். ம்ம்ம், என்ன நம்ம மாதிரி ரெண்டுங் கெட்டானுங்க இன்னும் எத்தனை பேரு நாயா பேயா அலைஞ்சிகிட்டு இருக்காங்களோ?''

''முத்துசாமி ...! இப்ப என்ன குடியா முழுகிப் போச்சு. பூனை கண்ண மூடிட்டா பூலோகம் இருண்டா போயிடும். இவனுங்கள விட்டா – அந்தத் தோட்டத்த விட்டா நம்மால பொழைக்க முடியாதா என்ன? என்னையும் நடுத்தெருவுல நிறுத்துனவனுங்க தானே இவனுங்க. நான் என்ன கெட்டா போயிட்டேன். இப்பதான் நான் நல்லா இருக்கேன். நீலப் *பாஸ்போட்டுக்கும்* எழுதிப் போட்டுட்டேன். உனக்கும் எழுதிப் போட்டுடலாம். கவலப்படாதப்பா. பட்டணத்துல ஒரு *செண்டோல்* கடை வச்சே நீ பொழச்சிக்கிலாம். *பர்மிட்டாம் நோட்டிசாம்* ... சும்மா தூக்கிப் போட்டுட்டு வருவியா...!''

மரம் வச்சவன் தண்ணி ஊத்தாமலா போவான் – தன் மனைவி சொன்ன பழமொழியின் அர்த்தம் அப்போதுதான் முத்துசாமிக்குப் புரிந்தது.

– **ஆ.நாகப்பன்**

**இதுதான் வாழ்க்கை**

**11** தோட்டப்புறத்தில் முத்துசாமி எதிர்நோக்கிய பிரச்சனைகள் யாவை?

Calon perlu banyak membaca dan menghayati genre cerpen sebagai persediaan mendekati soalan sebegini.

(11) தோட்டப்புறத்தில் முத்துசாமிக்கு மூன்று மாதம் நோட்டிசும் மறு வேலை தேடுமாறும் கட்டளை விதிக்கப்படுகின்றது. இதனால், முத்துசாமி தன் ஏழ்மையான குடும்பத்தை எங்குக் கொண்டு செல்வது என்று கவலைப்படுகின்றான். மேலும், மாதவன் கிராணியால் தன் மகளுக்கும் மனைவிக்கும் பல அவமானங்கள் அங்கு நேர்ந்துள்ளன. மேலும், வேலையில்லாமல் முத்துசாமி அங்குமிங்கும் அலைகின்றான். இவையாவும் முத்துசாமி தோட்டப்புறத்தில் எதிர்நோக்கிய பிரச்சனைகள் ஆகும்.

Calon berjaya memberikan mutu jawapan yang baik. Calon dapat memahami teks cerpen dengan jelas. Calon juga dapat menjawab soalan beraras rendah ini dengan tepat dan menyenaraikan masalah-masalah yang dihadapi oleh watak utama dalam cerpen. Jawapan di atas merupakan contoh jawapan calon yang baik.

Soalan 12

**12** அண்ணாசாமி தோட்டத்தைவிட்டு வெளியேறியதற்கான காரணம் என்ன?

Calon perlu banyak membaca dan menghayati genre cerpen sebagai persediaan mendekati soalan sebegini.

(12) அண்ணாசாமியும் அந்தோட்டத்தில் வேலை செய்தவனாவான். மாதவன் கிராணியோடு ஏற்பட்ட வாய் தகராறு முற்றி அவசரத்தில் கையை ஓங்கிவிட்டான் அண்ணாசாமி. இதனால், அவனுக்கு இருபத்து நான்கு மணி நேர நோட்டிசு கிடைக்கப்பெறுகின்றது. இதன் காரணமாகவே, அண்ணாசாமி தன் குடும்பத்தோடு அந்தோட்டப்புறத்திலிருந்து வெளியேறி இறுதியாக சிரம்பானுக்குச் சென்றடைகின்றனர்.

Calon dapat memberikan mutu jawapan yang baik. Calon berjaya mengenalpasti dan menyenaraikan sebab-sebab watak sampingan ini meninggalkan ladang. Penggunaan laras bahasa yang mudah dalam cerpen membantu calon memberikan jawapan tepat seperti di atas.

Soalan 13

**13** கீழ்க்காணும் சொற்றொடர்களின் சூழலுக்கு ஏற்ற பொருளை எழுதுக.

(i) கையில் பசையுள்ளவர்கள்

(ii) கையை ஓங்கி விட்டான்

Calon perlu fasih dengan laras bahasa cerpen untuk menjawab soalan.

(13) (i) கையில் பசையுள்ளவர்கள் - கை நிறைய பணமுள்ளவர்கள்

(ii) கையை ஓங்கி விட்டான் - அடித்து விட்டான்.

Kebanyakan calon berjaya memberikan maksud rangkaikata dengan tepat. Calon berjaya menguasai hukum bahasa. Jawapan di atas merupakan contoh jawapan calon yang cemerlang.

Soalan 14 (i)

**14** (i) **"அட இதுக்காக ஏன்யா வருத்தப்படுற! மரம் வச்சவன் தண்ணி ஊத்தாமலா போவான்?"**

மேற்காணும் வரிகள் உணர்த்தும் கருத்து யாது?

Calon memerlukan penguasaan laras bahasa cerpen dan bahasa pasar untuk menjawab soalan-soalan ini.

கேள்வி 14

பல பிரச்சனைகளையும் கஷ்டங்களையும் தந்த இறைவன் அதற்காக அதற்கான ~~முடிவையும்~~ முடிவையும் தீர்ப்பதற்கான வழிகளையும் கண்டிப்பாகக் கொடுப்பான்.

Calon dapat memberikan maksud yang tepat bagi ungkapan dalam cerpen. Calon juga dapat memahami maksud yang disampaikan dalam bahasa pasar dan mengalihkannya dalam bahasa standard. Jawapan di atas merupakan contoh jawapan calon yang cemerlang.

Soalan 14 (ii)

(ii) இச்சிறுகதையின் வாயிலாக உமக்கு ஏற்பட்ட உணர்வென்ன?

Calon memerlukan penguasaan laras bahasa cerpen dan bahasa pasar untuk menjawab soalan-soalan ini.

(ii) இச்சிறுகதையின் வாயிலாக எனக்கு ஏற்பட்ட உணர்வு
மற்றவர்களிடம் கைநீட்டி வேலை செய்வதுடன் சொந்தத்
தொழில் செய்து முன்னேறுவதே சிறப்பு. மேலும், நாம
பதற்றம் அடையாமல் சிந்தித்துச் செயல்பட்டோம்
ஆனால், நிச்சயமாக அதைப் புறக்கணிக்க முடியும்.
அதுமட்டுமின்றி, தோல்விகளைக் கண்டு நாம் மனம் தளர்ந்து
போகக்கூடாது. இறுதியாக, கல்வியைக் கற்றோமேயானால்
வாழ்க்கையில் மற்றவரிடம் கையேந்தும் அவசியம் கிடையாது

Segelintir calon gagal mengemukakan mesej sebenar yang disampaikan dalam cerpen. Malahan calon hanya meluahkan perasaan individu. Jawapan di atas merupakan contoh jawapan calon yang cemerlang.

Soalan 15

**15** *கீழே கொடுக்கப்பட்டுள்ள கவிதையை வாசித்து, உமது* **சொந்தமொழிநடையில் விளக்கம்** *எழுதுக.*

ஆண்டஇனம் என்றுதினம் ஆர்ப்பரித்தால் மட்டும்
    ஆகிவாரா தெச்செயலும்? ஆதலினால் தோழா!
ஈண்டுநமைச் சூழ்ந்துறையும் இருளகற்ற ஒன்றாய்
    இணைந்திடுவாய் மொழியின்கீழ் இன்றேநம் வாழ்வு
மீண்டுவர எளிதாகும் மேன்மையெல்லாம் கூடும்
    வீரமிகு செந்தமிழா வினையாற்ற உன்னை
வேண்டுகிறேன்; குலங்காக்க விரைந்திடுவாய்; கொண்ட
    வேதனைகள் போதுமினி விரைந்தெழுந்தே வாராய்!

**– எஸ்.எம்.தீன்**
[மலேசியத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம்]

Calon perlu memiliki pengetahuan laras bahasa yang asas dan kemahiran memahami bahasa puisi untuk menjawab soalan ini. Laras bahasa puisi ini agak tinggi.

கவிஞர் எஸ்.எம்.தீன் அவரது கவிதையின் வழி
கருத்துகளைக் கூறியுள்ளார். நாம் ஆண்ட இனம்
என ஆர்ப்பரித்து கொண்டால் மட்டும் நாம் முன்னேறி
விட மாட்டோம். பேச்சில் காட்டுவதை விடுத்து செயலில்
இறங்குவோம் என்கிறார் கவிஞர். ஈண்டு நம்மையெல்லாம்
சூழ்ந்து கொண்டிருக்கும் இருளை அகற்ற வேண்டும்.
அதற்காக நாமெல்லாம் ஒன்றுமையாய் ஒன்றிணைய வேண்டும்.
இன்றே நம் தமிழ் மொழியின் கீழ் நாமெல்லாம்
ஒன்றிணைந்து வாழ்வை மீண்டும் எளிதாக்குவோம்,
மேன்மையைக் கூட்டுவோம். வீரமிகு செந்தமிழைச்
செயலாற்ற விழைகிறார் கவிஞர். நமது
தலைத்தைக் காக்க விரைந்து வர அழைக்கிறார் தமிழனை.
நாம் கொண்ட வேதனைகள் இனி போதும் என்று களைய
விரைந்து எழுந்து வர அழைக்கிறார் வீரமான செந்தமிழனை.

Calon tidak memahami kosa kata yang digunakan dalam puisi. Oleh yang demikian, mutu jawapan calon agar kurang memuaskan. Majoriti calon hanya menyalin baris-baris tertentu daripada puisi demi melengkapkan prosa puisi tersebut. Jawapan di atas merupakan contoh jawapan calon yang cemerlang.

15.) எழுந்து என்றும் துணிந்து செயல்பட வேண்டும். நாட்டினைச் சூழ்ந்துறையும் இருளை அகற்றி ஒளியைப் பெருக்கி ஒன்றாய் இணைந்து மொழியின் நாத்தைப் பெற்றி வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டும். மீண்டும் செயல்படுவது எவிராரும், மேன்மையெல்லாம் ~~ஓங்கும்~~ சிறந்து விளங்கும். வீரனாகிய தமிழன் விளையாற்ற வேண்டும். தமிழர் இனத்தைத் ~~நிலைபெற்~~ ~~நிலைநிறு~~ நிலைநிறுத்த விரைந்து செயல்பட வேண்டும். கண்ட துன்பங்களை நீக்கி எழுந்து துணிந்தே செயல்பட வேண்டும்.

Contoh jawapan calon di atas adalah kurang bermutu.

Soalan 16

**16** கொடுக்கப்பட்டுள்ள **மரபுத்தொடரைப்** பொருள்விளங்க வாக்கியத்தில் அமைத்துக் காட்டுக.

**தண்ணீர் காட்டுதல்**

Calon dikehendaki mahir dalam marabutthodar dan maksudnya untuk menjawab soalan ini.

(16) கடந்த மூன்று மாதங்களாக வீட்டு வாடகையை நிச்சயம் ~~கட்டி~~ செலுத்தி விடுவதாகச் சொல்லிக் கொண்டிருந்த அன்பரசு நேற்று வீட்டு ~~வாசை~~ வாடகைக்காரருக்குப் பணத்தைச் செலுத்தாமல் தண்ணீர் காட்டி ஓடினான்.

Calon dapat mengenali maksud sebenar marabutthodar yang telah diberikan. Tetapi, calon mengalami kesukaran dalam pembinaan ayat dengan menggunakan marubutthodar tersebut. Kesalahan ejaan amat ketara dalam ayat yang dibina oleh calon. Sekali lagi membuktikan kekurangan budaya membaca dalam kalangan calon. Berikut merupakan contoh jawapan calon yang cemerlang.

16) பலர் வீட்டில் திருடி பிடிப்பட்ட மாறன் பல பொய்களைக் கூறி போலீசாரிடமே தண்ணீர் காட்டித் தப்பித்து ஓடினான்.

Jawapan di atas merupakan contoh jawapan calon yang kurang bermutu.

Soalan 17

**17** கொடுக்கப்பட்டுள்ள பொருளுக்கேற்ற **பழமொழியை** எழுதுக.

> **நாம் பிறருக்குச் செய்கின்ற அறம், நமக்குத் துன்பம் வருங்கால் நம்மைக் காத்து நிற்கும்.**

Calon perlu melengkapi diri dengan pengetahuan pazhamozhi dan maksud yang disarankan untuk mencuba soalan ini.

17) தர்மம் தலைகாக்கும்

Calon dapat mengenali maksud sebenar pazhamozhi yang telah diberikan. Oleh itu calon dapat menulis pazhamozhi yang tepat. Mutu jawapan calon di atas adalah cemerlang.

Soalan 18

**18** கொடுக்கப்பட்டுள்ள **விவேக சிந்தாமணிச் செய்யுளின்** விளக்கம் எழுதுக.

> **புத்திமான் பலவா னாவான் பலமுளான் புத்தி யற்றால்**
> **எத்தனை விதத்தி னாலு மிடரது வந்தே தீரும்**
> **மற்றொரு சிங்கந் தன்னை வருமுயல் கூட்டிச் சென்றே**
> **உற்றதோர் கிணற்றில் சாயல் காட்டிய வுவமை போல**

Calon memerlukan pengetahuan yang mendalam mengenai ceyyul dan maksudnya yang disarankan untuk menjawab soalan ini.

18.) புத்திசாலி பலமுள்ளவர்கள். பலமுள்ளவர்கள் புத்தியற்றுப் போனால் எந்தவித
~~[illegible]~~ இடரினாலும் துன்பம் வந்தே தீரும். புத்திசாலியான முயல் ஒன்று
பலம்வாய்ந்த சிங்கம் ஒன்றைக் கிணற்றுக்குக் கூட்டிச் சென்று
அதன் பிம்பத்தையே கிணற்றில் ~~காட்டில்~~ காட்டி அதைக் கொன்றது
போல புத்திசாலியானவர்கள் பலமுள்ளவர்களைத் தங்களது
அறிவாற்றலினால் வெல்ல முடியும்.

Calon berjaya mengenali maksud ceyyul yang telah diberikan.Calon dapat mengenali maksud sebenar ceyyul yang telah diberikan. Tetapi, calon mengalami kesukaran dalam proses penjelasan semua aspek maksud yang dikehendaki soalan. Oleh yang demikian, calon hanya menjawab sebahagian daripada jawapan sahaja. Kesalahan ejaan juga amat ketara dalam penjelasan maksud ceyyul calon. Jawapan di atas merupakan contoh jawapan calon yang cemerlang.

Soalan 19

**19** *கீழ்க்காணும் உரையாடலில், அடைப்புக்குள் இருக்கும் இடங்களுக்குப்* **பொருத்தமான** *மொழியணிகளை எழுதவும். பத்தியை மீண்டும்* **எழுத வேண்டாம்**.

தம்பீ! நீ முயன்றால் எழுத்தாளனாக ஆகலாம். கல்லெல்லாம் மாணிக்கக் கல்லல்ல; ஒளி வீசுகின்ற எல்லாமே தங்கமல்ல (i **பழமொழி**) என்பதுபோல் புறத்தோற்றத்தைக் கண்டு ஏமாறக்கூடாது என்று நீ அறிந்திருப்பாய். அதுபோல எழுதுவதெல்லாம் எழுத்தல்ல என்பதையும் நீ அறிந்திருக்க வேண்டும்.

எழுதுகிறவனெல்லாம் எழுத்தாளன் அல்லன். அவன் எழுத்தன். அவ்வளவுதான். எழுத்தை ஆள்பவன்தான் எழுத்தாளன். உயர்ந்த உள்ளத்தைப் பெற்று நிறைந்த கருத்துகளைக் கொண்டு, குறைந்த எழுத்துகளால் எழுதுப்படுவதே எழுத்து என்றாகும். அவ்வாறு எழுதுபவனே நல்ல எழுத்தாளன்.

நெல்லைத் தேய்த்து உமியை ஊதிவிட்டால் அரிசியைக் காண முடியும். எழுத்துகளைப் படித்துக் குறைகளை நீக்கிவிட்டால், கருத்துகள் காணப்பட வேண்டும். இன்றேல், நெற்பதர்களைப்போல அவையும் பதராகிப் போய்விடுவதோடு நற்சிந்தனையுடைய வாசக மனங்களில் தீய எண்ணங்களை விதைத்து நாளடைவில் தரமற்ற வாசகர்களாய் அவர்களை உருமாறச் செய்துவிடும். (ii **உவமைத்தொடர்**)

எழுத்துகளுக்கு ஓர் ஆற்றல் உண்டு; அதுவும் பேராற்றல். மன்னரின் செங்கோலைவிட மக்களின் எழுதுகோலுக்கு அதிக ஆற்றல் உண்டு. வில்லும் வேலும் கண்ணாற் கண்டவரின் உடலில் மட்டும் பாயும்; காயம் உண்டாக்கும். ஆனால், எழுத்து, கண்ணாற் காண முடியாதவர் உள்ளத்திலும் பாயும்; உள்ளத்தையும் புண்படுத்தும். தீக் காயத்தைவிட நாவினால் பட்ட காயம் வேதனையானது அல்லவா ...! (iii **திருக்குறள்**)

அதுமட்டுமல்ல தம்பீ, எழுத்துகளுக்கென்று ஒருநெறி உண்டு. நெறி என்பது நன்நெறியையே குறிக்கும். அதனால், நல்ல நெறிகளை எண்ணி, நல்ல நெறிகளைப் படித்து, நல்ல நெறிகளைக் கேட்டு, நல்லனவற்றை எழுதி மக்களுக்கு நல்வழி காட்டும் நல்ல எழுத்தாளர்கள் நமது நாட்டில் பெருகியாக வேண்டும். அவர்களுள் நீயும் ஒருவனாக இருந்து தடுமாறி நடப்பவர்களுக்கு உதவும் கைக்கோல்போல, வாழ்க்கையில் தடுமாறுபவர்களுக்கு உன் எழுத்துகள் அறிவுரைகளாக அவர்களுக்குத் துணை நிற்க வேண்டும். (iv **திருக்குறள்**)

Calon perlu bersedia dengan pengetahuan semua aspek mozhianigal yang disarankan untuk mencuba soalan ini.

i) மின்னுவதெல்லாம் பொன்னல்ல

ii) நல்ல மரத்தில் புல்லுருவி பாய்ந்தாற்போல

iii) தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு

iv) இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்க முடையார்வாய்ச் சொல்.

Kebanyakan calon dapat menjawab dua daripada empat jawapan yang dikehendaki. Calon agak lemah mengenalpasti uvamaitthodar dan thirukkural yang tepat. Calon juga gagal mengenali kesemua uvamaitthodar dan thirukkural yang diajar. B Jawapan di atas merupakan contoh jawapan calon yang cemerlang.

Soalan 20 (a)

**20** கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளி.


(அ) சேர்த்து எழுதுக:

(i) செம்மை + பயிர்


(ii) வந்து + பார்

(iii) தீ + பெட்டி

Calon dikehendaki menyediakan diri dengan pengetahuan dan hukum-hukum bahasa mengenai serthu ezhututal dan pirittu ezhututal untuk menjawab soalan ini.


20). அ i) செம்பயிர்
ii) வந்துபார்
iii) தீப்பெட்டி.

Calon gagal memberi jawapan yang tepat. Calon tidak mengetahui dan tidak berjaya mengaplikasikan hukum tatabahasa dalam mencantumkan dua perkataan dengan tepat. Jawapan di atas merupakan contoh jawapan calon yang cemerlang.



20) அ) i) செப்பயிர்
ii) வந்துபார்
iii) தீப்பெட்டி

Jawapan di atas merupakan contoh jawapan calon yang kurang bermutu.

Soalan 20 (aa)

(ஆ) வினைச்சொல் என்றால் என்ன? அதற்கு **இரண்டு** எடுத்துக்காட்டுகள் எழுதவும்.

Calon perlu bersedia dengan pengetahuan vinaitsol untuk menjawab soalan ini.


ஆ) ஒரு ஒருவர் எழுவாயின் செயல் அல்லது
தொழிலைக் காட்டும்
எடுத்துகாட்டுகள் - நடந்தான், ஓடினான்

Kebanyakan calon gagal memberikan kedua-dua aspek jawapan yang dikehendaki oleh soalan. Calon berjaya memberikan maksud vinaitsol. Malangnya, calon gagal memberikan contoh yang tepat. Calon tidak memberikan kata dasar yang tepat.  Jawapan di atas merupakan contoh jawapan calon yang cemerlang.

ஆ) வினைச்சொல் தொழிலைக் குறிக்கும். வினைச்சொல் இரண்டு வகைப்படும். ~~அவை~~ அவை செய்வினை மற்றும் செயப்பாட்டு வினையாகும்.

செய்வினை → ஆசிரியர் பாடம் கற்பித்தார்.

செயபாட்டுவினை → பாடம் ஆசிரியரால் கற்பிக்கப்பட்டது.

Jawapan di atas merupakan contoh jawapan calon yang kurang bermutu.

Soalan 21

**21** கொடுக்கப்பட்டுள்ள தன்வினை வாக்கியத்தை **பிறவினை வாக்கியமாக** மாற்றி எழுதுக.

> நீலகண்டன், குழந்தை வளர்ப்புமுறை என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுவார்.

Calon perlu mahir dalam aspek nahu dan tatabahasa untuk mencuba soalan ini.

உ. நீலகண்டன், குழந்தை வளர்ப்புமுறை என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுவிப்பார்.

Majoriti calon tidak teliti semasa menjawab soalan. Calon mengenali cara mengubah ayat tanvinai kepada ayat piravinai. Tetapi, calon gagal mengaplikasikan mengikut ethirkaalam. Jawapan di atas merupakan contoh jawapan calon yang cemerlang.

கேள்வி 21

நீலகண்டன் , குழந்தை வளர்ப்புமுறை என்னும் தலைப்பில் கட்டுரை எழுதவைத்தார் .

Jawapan di atas merupakan contoh jawapan calon yang kurang bermutu.

Soalan 22

**22** கீழே கொடுக்கப்பட்டுள்ள பகுதியில் **ஐந்து பிழைகளை** மட்டும் அடையாளங்கண்டு அவற்றைச் **சரிபடுத்தி** எழுதுக. பத்தியை மீண்டும் **எழுத வேண்டாம்**.

கட்டுரை எழுதும்போது முண்ணுரை, பொருள், முடிவுரை என்று பாகுபாடு செய்து, பொருளை மிகைப்படுத்தாமலும் குரைத்துக் கூறாமலும் வழுவின்றி இனிய தொடக்கமும் அழகிய முடிவும் அமைத்து எழுதுதல் வேண்டும். கட்டுரை எழுதுவோர் கூடியமட்டும் பிற மொழிச் சொற்களை விலக்கி தேவைப்படும் இடத்தில் மட்டும் பிற மொழிச் சொற்களை பயன்படுத்தும் வழக்கத்தை மேற்கொள்ளுதல் நலமாகும். மொழிநடை? கற்பவரின் உள்ளம் கவரும் முறையில் எலிய தமிழில் நல்ல முறையில் இருத்தல் மிக மிக விரும்பத்தக்கது.

Calon perlu menguasai aspek-aspek hukum bahasa seperti kesalahan ejaan dan tanda bacaan untuk menjawab soalan ini.

22. முண்ணுரை - முன்னுரை

குரைத்துக் - குறைத்துக்

சொற்களை பயன்படுத்தும் - சொற்களைப் பயன்படுத்தும்

எலிய - எளிய

மொழிநடை? — மொழிநடை,

Majoriti calon dapat mengenalpasti kesalahan ejaan dan dapat membetulkannya dengan tepat. Namun demikian terdapat segelintir calon yang gagal mengenali kesalahan tanda bacaan dalam perenggan yang diberikan.  Jawapan di atas merupakan contoh jawapan calon yang cemerlang.

**SARANAN KEPADA CALON:**

1. Calon perlu memahami kehendak soalan.
2. Calon perlu menguasai hukum-hukum yang disarankan dalam sukatan pelajaran Bahasa Tamil Sekolah Menengah.
3. Calon perlu menyemak semula supaya jawapannya menepati kehendak soalan.
4. Calon harus membudayakan sikap membaca bahan-bahan Bahasa Tamil.
5. Calon harus memperbanyakkan latihan pemahaman.
6. Calon harus melatih menulis secara kreatif dalam Bahasa Tamil.
7. Calon juga perlu memahami maksud dan tema sajak sebelum memprosakannya.
8. Calon perlu mengelak dari menyalin bulat-bulat petikan asal.
9. Calon sepatutnya mengemukakan pendapat sendiri untuk menjawab soalan yang memerlukan isi tersirat.
10. Calon perlu menggunakan ayat yang lengkap dan gramatis.
11. Calon perlu menggunakan penanda wacana yang sesuai untuk memperlihatkan kesinambungan di antara isi.
12. Calon juga perlu menggunakan kosa kata yang sesuai dan tepat.
13. Calon juga perlu menitikberatkan ejaan dan tanda bacaan yang betul.

**SARANAN KEPADA GURU:**

1. Para guru perlu mempelbagaikan bahan bacaan seperti novel, cerpen, sajak dan drama dalam proses pengajaran dan pembelajaran Bahasa Tamil.
2. Guru perlu memperbanyakkan latihan tatabahasa dan berunsur mozhianigal.
3. Guru juga perlu menggalakkan pelajar membaca karya-karya dan artikel-artikel dalam majalah dan surat khabar Bahasa Tamil tempatan.
4. Guru juga perlu meningkatkan pengetahuan dalam teknologi maklumat dan komunikasi (ICT) untuk menjalankan proses Pembelajaran dan Pengajaran secara berkesan.
5. Guru perlu memperbanyakkan latihan pemahaman dan memprosakan sajak.
6. Guru perlu menganjurkan aktiviti-aktiviti kokurikulum seperti pertandingan menulis karangan, sajak dan sebagainya yang akan membantu calon secara tidak langsung.
7. Panitia Bahasa Tamil peringkat sekolah dengan kerjasama Persatuan Bahasa Tamil harus menganjurkan pelbagai aktiviti yang boleh membantu meningkatkan penguasaan Bahasa Tamil dalam kalangan pelajar.
8. Guru harus peka dan bersedia mengikuti arus perkembangan isu-isu semasa.